அனுப்பி வைத்திருக்கிறேன். அதாவது மீனவர்களுடைய பகுதிக்கு. அவர்கள் சென்று விவரம் அறிந்து வந்த பிறகுதான் என்ன நடைபெற்றது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இதற்குமேல் நான் இதைப்பற்றிக் கூறுவதற்கு எந்த விவரமும் என்னிடத்தில் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கோவை மாவட்டம் சின்னவேடன்பட்டி மற்றும் வேலப்ப நாயக்கன்புதூர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களை அகற்றும் நடவடிக்கை குறித்து.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், சின்னவேடன்பட்டி பேரூராட்சியில், சர்வே நம்பர் 511, 513பி-ல் 60 வீடுகளும், 129-2-ஏ/ல் 35 வீடுகளும், 221-ல் 400 வீடுகளும், வேலப்ப நாயக்கன்புதூர் அண்ணா நகரில் 80 வீடுகளும், சுமார் 10 ஆண்டுகளாக அங்குள்ளவர்கள் கட்டி வசித்து வருகிறார்கள். அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி, ரேசன் கார்டுகள் எல்லாம் வழங்கி, இன்றைக்குத் திடீரென்று என்ன காரணத்தினாலோ புல்டோசர் வைத்து ஏறக்குறைய 40 லட்சம் பெறுமான்முள்ள 700 வீடுகள் தகர்த்து எறியப்பட்டிருக்கின்றன. என்ன காரணத்தினால் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பதோடு, சுமார், 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், 3,000 பேர் வீடு இல்லாமல் தவித்துக்கொண்டிருப்பதால் அதை வழங்குவதோடு இந்த நேரத்தில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை, தமிழ்க் குடிமகனாக நீங்கள் இங்கே இருக்கும் போது அங்கே தமிழ்க் குடிமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணாவின் பெயராலே அங்கே நகரம் உருவாக்கப்பட்டிருக்கிற நிலையில் அண்ணாவின் பெயரைக்காக்கின்ற இந்த அரசு இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. கே.ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு.செங்கோட்டையன் அவர்கள் இப்படி ஒரு விஷயத்தை மென்சன் பண்ணியது பற்றியும், தாங்கள் அனுமதித்தது பற்றியும் எந்தக் கேள்வியும் நான் கேட்கவில்லை. ஆனால், ஏற்கெனவே கோவை மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முந்தாநாள், சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஒன்றாகக் கூட்டி வைத்து பேசி, இரண்டாம் முறையாக அவர்கள் அத்தனை பேரும் கையெழுத்திட்டஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை மீறி இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. இதனுடைய அடிப்படையே தவறான இடத்திற்குப் போகாமல் தாங்கள் பாதுகாக்க வேண்டுமென்று உங்களிடம் நான் சப்மிஷன் செய்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பிரமணியம், திரு. சின்னசாமி, திரு.பெரியசாமி போன்றவர்கள், இப்போது திரு. செங்கோட்டையன் அவர்கள் கிளப்பிய பிரச்சினையின் அடிப்படையில் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ரமணி அவர்கள் மேற்கொண்டு இதுதொடர்பாக என்ன நடைபெற்றிருக்கிறது என்பதைப் பற்றி இங்கே தெரிவித்திருக்கிறார்கள். சுருக்கமாக நான் அதை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இதுசம்பந்தமாக 5–4–1990 அன்று மாலை 5.30 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு நடைபெற்ற சர்வ கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

''புறம்போக்கு நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர்களை தகுதியின் அடிப்படையில் சின்னவேடன்பட்டி கிராமம் மஜரா உடையான்பாளையம் எண் 220/பி1ஏ மற்றும் 221/1 ஆகிய மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்களில் நில ஒதுக்கீடுசெய்து அவர்களுக்கு மனைப்பட்டா உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்; சின்னவேடன்பட்டி கிராமம் மஜரா வேலப்பநாயக்கன்புத்தூர் 364-ல் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள், ஊராட்சி ஒன்றியத்தினால் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளதால், இங்குள்ள நபர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் அங்கே குடியிருக்க அனுமதித்தல்; மேற்படி சின்னவேடன்பட்டி கிராம எல்லையிலுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் புதிய ஆக்கிரமிப்பு எதையும் அனுமதிக்கக் கூடாது.''

எனவே, சின்னவேடன்பட்டியில் இருந்த ஆக்கிரமிப்புகள் பொது அமைதி கருதியே அப்புறப்படுத்தப்பட்டன. இதனால் கிராமத்தில் மக்களிடையே பதட்ட நிலை எதுவும் இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் மாற்று இடங்களைக் கொடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சர்வ கட்சிக் கூட்டத்தில் எல்லோருக்கும் திருப்திகரமான முடிவுகளாக மேற்கொள்ளப்பட்டன என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. உரிமை மீறல் பிரச்சினை.

'தினகரன்' நாளிதழ்மீது—அவை நிகழ்ச்சிகள் தொடர்பான உறுப்பினர்களின் நடவடிக்கைகளை விமர்சித்துத் தலையங்கம் தீட்டியுள்ளது குறித்து.

10–20 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் 1–4–1990 நாளிட்ட ''தினகரன்'' நாளிதழில் எழுதப்பட்டுள்ள தலையங்